வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 11/2019

வழக்கு சாட்சி LW10/PW8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவராஜ், காவல் ஆய்வாளர், ஊத்துக்கோட்டை காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கண்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 54 |

தேதி 10.08.2026.

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2015ம் வருடம் புழல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் உதவி ஆய்வாளரான ரகுநாதன் அவர்கள் பகல் 11 மணி அளவில் செல்வி. தாரணி என்பவர் அளித்த புகாரின் மீது புழல் காவல் நிலைய குற்ற எண் 1445/2015, இதச பிரிவுகள் 406, 420, 506(i) கீழ் வழக்கு பதிவுச் செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் வழக்கினை விசாரணக்கு எடுத்துக் கொண்ட உதவி ஆய்வாளர் சம்பவ இடமான ஆசிரியர் காலனி 7வது மெயின் ரோடு என்ற இடத்தில் சாட்சிகள் அனிஷ், சிவகுமார் ஆகியோர் முன்னிலையில் பகல் 12.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது அ.த.சா.ஆ.6, 7 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் தாரணி, மகேந்திரன், ராஜேஷ்வரி, சாந்தி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரி சுசித்ரா என்பவரை 20.06.2015 ம் தேதி பகல் 12.30 மணிக்கு ஆசிரியர் காலனி சந்திப்பில் வைத்து கைது செய்து சாட்சிகள் ரமேஷ், கணேஷ் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் வழக்கு கோப்பை பார்வையிட்டு இவ்வழக்கின் விசாரணையை முடித்து இதச பிரிவுகள் 406, 420, 506(i) கீழ் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரரிடம் முதல் தகவல் அறிக்கையின் நகல் அளித்து கையொப்பம் பெற்றுள்ளோமா என்றால் பெற்றுள்ளோம். அவருக்கு அளித்ததற்கு நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. புகாரில் சம்பவமானது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாக கூறியுள்ளார்கள் என்றால் ஆமாம். அதில் மாதமோ, தேதியோ குறிப்பிட்டுள்ளாகளா என்றால் இல்லை. புகார்தாரரிடம் 32 சவரன் நகை இருந்ததற்கு ஆதாரம் வாங்கினோமா என்றால் இல்லை. நகை வாங்கியதற்கான ரசீது ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. ரூ. 2,50,000 பெற்றுக் கொண்டதற்கு புரோநோட்டோ, காசோலையோ வேறு ஆவணங்கள் ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை.

நான் விசாரணையின் போது கேட்டுப் பெற்றேனா என்றால் இல்லை. எந்த மாதிரி நகைகளை கொடுத்தார் என்பதனை புகாரில் குறிப்பிட்டு கூறியிருந்தாரா என்றால் இல்லை. பணமோ, நகையோ

எதிரி மகன் புவனேஷ் மருத்துவ செலவிற்காக கொடுத்த்தாக கூறியுள்ளார் என்றால் ஆமாம். எந்த மருத்துவமனையில் , எதற்காக மருத்துவம் பார்த்தார்கள் என்பதனை குறிப்பிட்டு புகாரில் கூறியிருந்தாரா என்றால் இல்லை. நான் எனது விசாரணையில் கேட்டுத் தெரிந்துக் கொண்டேனா என்றால் இல்லை. புகார்தார்ரும் , எதிரியும் அருகருகே வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். அருகருகே வசித்து வந்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் விசாரணையின் போது கேட்டுப் பெற்றேனா என்றால் இல்லை. பணம், நகை கொடுக்க வேண்டும் என்பதற்கு வழக்கறிஞர் மூலம் நோட்டிஸ் அனுப்பியதாக புகாரில் கூறியுள்ளாரா என்றால் இல்லை.

புகாரில் எதிரி தன்னை வீட்டில் வைத்து மிரட்டியதாக கூறியுள்ளார் என்றால் ஆமாம். எதிரி மிரட்டியதாக பொது நபர் யாரும் சாட்சியம் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. புகார்தாரர் தந்தை பெயர் ததிபாலன் என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் கணவர் ததிபாலன் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ நேரம் காலை 10 மணி என்றால் ஆமாம். புகார் அளித்த்து காலை 11 மணி என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமாம் 3 கி.மீ. புகாரினை பெற்றால் பொது நாட்குறிப்பில் குறிப்போம் என்றால் ஆமாம். பொது நாட்குறிப்பில் புகாரின் நேரம் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் ஆமாம். எதிரியிடமிருந்து பணமோ, நகையோ பறிமுதல் செய்யவில்லை என்றால் ஆமாம். புகாரில் கையில் ஏதேனும் வைத்து மிரட்டியதாக கூறியுள்ளார்களா என்றால் இல்லை.

இவ்வழகில் எந்தவித ஆவணமும் இல்லாமல் எதிரியை சிறையில் அடைக்க நோக்கு தான் பொய்யான வழக்கினை பதிவுச் செய்தோம் என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரி மீது பொய்யான குற்றச்சாட்டினை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், முழுக்க முழுக்க பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**